# <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>
## <u>தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு, ஆகஸ்ட் 2023</u>
## <u>அரசுத் தேர்வு சேவை மையங்களுக்கான அறிவுரைகள்</u>

நடைபெறவுள்ள ஆகஸ்ட் 2023 <u>தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்</u> தேர்விற்கு அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் (Government Examinations Service Centres) தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்யும் போது தகுதியான தனித்தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள் :–

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | கட்டணம் |
|---|---|---|
| 8888 | முதல்முறையாக அனைத்துப் பாடங்களுக்கும் விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித்தேர்வர்கள் (01.08.2023 அன்று 12½ வயது பூர்த்தி அடைந்தவர்) | தேர்வுக் கட்டணம் – 100/–<br>இதரக் கட்டணம் – 25/–<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் – 70/–<br>மொத்தக் கட்டணம் – ரூ.195/–<br><u>தட்கல் கட்டணம்</u> = ரூ.500/– |
| 9999 | ஏற்கனவே தேர்வெழுதி, தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு விண்ணப்பிக்கவுள்ள தனித்தேர்வர்கள் | |

<u>மாற்றுத் திறனாளிகள்</u>

i. பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

ii. மாற்றுத்திறனாளித் தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், <u>உரிய மருத்துவச் சான்றிதழ் நகல்களையும் கட்டாயமாக இணைத்து</u> சமர்ப்பிக்க வேண்டும். மேலும், **மாற்றுத்திறனாளித் தேர்வர்களது விண்ணப்பத்தினை ஆன்–லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்பொழுது, அத்தேர்வர்கள் தேர்வெழுத கோரும் சலுகைகளின் விவரங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

**<u>சேவை மையங்களில் விண்ணப்பிக்க நேரில் வருகை புரியும் தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்:–</u>**

<u>பாட விவரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | மொழிப்பாடம் | தமிழ் (As per Tamil Learning Act 2006) |
| 2. | ஆங்கிலம் (English) | |
| 3. | கணக்கு (Mathematics) | தமிழ், ஆங்கிலம், உருது மொழிகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே விடையளிக்க வேண்டும். **TO BE ANSWERED IN TAMIL (or) ENGLISH (or) URDU MEDIUM ONLY)** |
| 4. | அறிவியல் (Science) | |
| 5. | சமூக அறிவியல் (Social Science) | |

**<u>விண்ணப்பிக்கத் தேவையான குறைந்தபட்ச கல்வித்தகுதி</u>**

1. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க குறைந்தபட்ச கல்வித்தகுதி எதுவும் தேவையில்லை. (No Minimum educational Qualification)

2. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8 ஆம் வகுப்பிற்கும் கீழ் படித்து இடையில் நின்ற 12 1/2 வயது பூர்த்தி அடைந்தவர்களும் இத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.

**<u>சேவை மையங்களில் விண்ணப்பிக்க நேரில் வருகை புரியும் தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்:–</u>**

1. **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **Notification** பகுதியில் உள்ள தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்களுக்கான அறிவுரைகளைப் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டுதல் வேண்டும்.
2. சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வரது விண்ணப்பங்களை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

..3..

3. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்தவுடன் திரையில் School / Institute Login என்ற வாசகம் தோன்றும் அதை click செய்த பின்னர் சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள **User ID மற்றும் Password-ஐ** பயன்படுத்தி, சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
4. **சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வர் எவ்வகையைச் சார்ந்தவர் என்பதனைக் கேட்டு உறுதிசெய்த பின்னர் சரியான வாசகத்தை click செய்து விண்ணப்பத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்.**
5. தனித்தேர்வர் விவரங்களை ஆன்–லைனில் பதிவு செய்த பின்னர், பதிவு செய்ததை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் (Confirmation Copy),Registration slip எனப்படும் படிவத்தினையும் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
6. விண்ணப்பத்தை ஆன்–லைனில் பதிவு செய்த பின் பதிவிறக்கம் செய்யும் விண்ணப்பத்தோடு (Application),Registration slip என்ற படிவத்தினையும், உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.
7. விண்ணப்பத்தின் மேல் இடப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.
8. விண்ணப்பத்தின் கீழ் தனித்தேர்வரிடம் உரிய இடத்தில் கையொப்பம் பெற வேண்டும்.
9. தனித்தேர்வர்கள் இணைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம் விண்ணப்பத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை கண்டிப்பாக சரிபார்க்க வேண்டும்.
10. தேர்வுக் கட்டணத்தினைப் பணமாக செலுத்த தனித்தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத்தொகை Registration Slip –ல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து ESLC தேர்வெழுத தேர்வர் தகுதியுள்ளவர் என்று உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாக பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வரின் தகுதி குறித்து சந்தேகம் எழும் நிகழ்வுகளில் உரிய காரணத்தை தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

..4..

11. Registration Slip-ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் **candidate copy** எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்ற பின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் **Fees paid** எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும் **candidate copy** யினை மட்டும் பிரித்து பள்ளி முத்திரையிட்டு தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.

12. பதிவேற்றம் செய்த தனித்தேர்வரது விவரத்தினை திருத்தம் செய்ய Candidate List Option–ஐ Click செய்ய வேண்டும்.

13. கடைசி நாளான **01.07.2023** அன்று அனைத்து விண்ணப்பங்களையும் பெற்ற பின்னர் Report Section-ஐ Click செய்து, தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

1. **தனித்தேர்வர்கள்** (முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்) நேரடித் தனித்தேர்வர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பள்ளிப் பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

2. **தோல்வியுற்ற பாடங்களை தற்போது தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**
   ஏற்கனவே தேர்வெழுதிப் பெற்ற சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. **வ.எண்.1 மற்றும் வ.எண்.2ல் காணும் தனித்தேர்வர்கள்**

ரூ.42/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்றை தவறாமல் விண்ணப்பத்துடன் இணைத்துப் பெற வேண்டும்.

குறிப்பு: பிறந்த தேதிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / நோட்டரி / நோட்டரி பப்ளிக்கிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் / குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) / **PAN CARD** போன்றவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

ஒம்/–
**இணை இயக்குநர்(பணியாளர்)**

நாள்: **19.06.2023.**
இடம்: சென்னை – **600 006.**